# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் உங | திருவள்ளுவர் ஆண்டு க௯எ௯ சருவசித்து—பங்குனி 1948—மார்ச்சு | மலர் ௰உ


## பொழிற்றொண்டர் கருத்துரைகள்.

நம் தமிழ்ப்பொழிலின் இருபத்து மூன்றாவது துணர், இந்த மலருடன் நிறைவுறுகின்றது.

இந்த ஆண்டில் பொழிற் சிறப்புக் கென நாம் கருதியிருந்த எண்ணங்களைச் செயற்படுத்தி நிறைவேற்ற முடியவில்லை. பல துறைகளிலும அறிவு பரவுதற்கான கட்டுரைகள் வெளியிட எண்ணினம். நம தாய் மொழி மேம்பாட்டுக்கான பல அறிஞர் கருத்துக்களையும், வழி துறைகளையும வகுத்துரைக்க எண்ணினம். நம் மதிப்புரை வேண்டி அன்பர்கள் அனுப்பிய நூல்களைக் குறித்து நம் கருத்தை அவ்வப்போது தெரிவிக்கவும எண்ணினம். தமிழ்ப்பொழில் அழகாகவும், பின்னும சிறப்பாகவும வெளிவருதற்கான பல திருத்தங்களைச் செய்யவும் எண்ணினம். எனினும், பொருள் முதலான வசதிக் குறைவினால் எம் எண்ணத்தைச் செயலுக்குக் கொண்டுவர முடியவில்லை. நம் சங்கத்திடத்து, சிறப்பாக நம் பொழிலிடத்து, ஆதரங் கொண்டுள்ள அன்பர்கள் உதவி பெருகுமானால், அடுத்துவரும் இருபத்து நான்காவது துணரில் எம் மனக் கிடக்கையை நிறைவேற்றலா மெனக் கருதுகிறோம்.

தமிழ்ப்பொழில் மலர்கள் காலந் தாழ்த்து வெளிவருதல் குறித்து, நம் அன்பரினும் நாம் பெரிதும் கவலை கொண்டுள்ளோம். இந்தக் காலத் தாழ்ச்சியை விரைவிற் போக்கி, ஒவ்வொரு மலரும் குறித்த திங்களில் வெளிவரச் செய்யலா மென்று துணிகின்றோம்.

இதுகாறும் நம் பொழிலை வளர்த்துச், செந்தமிழ்த் தொண்டு பூண்டொழுகிய பெருமக்களுக்கு எம் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, பின்னும் அத் தொண்டு சிறக்க அருள் புரிய அவர்களையும், ஏனைய தமிழ்ப் பெருமக்களையும வேண்டிக் கொள்கின்றோம்.

செட்டிநாட்டரசர், பேரறிஞர்,

வீரத்திரு.

# மு. அண்ணுமலைச் செட்டியார் அவர்கள் பிரிவு

---

தமிழ்த் தாயின் தவ மகனுரும், தமிழ் மக்களின் தவ முதல்வரும் ஆகிய செட்டிநாட்டு மன்னர் இறைவன் அடி எய்தியது உணர்ந்து இக் கரந்தைத் தமிழ்ச் சங்கம் துயர்க்கடலில் ஆழ்கின்றது.

இம் மன்னரது உலகினர் உணர்ச்சியும். பெருந்திரு நிலையும், பேரறச் செயல்களும, கடவுட் பற்றும், பிற சிறப்புக்களும உலக மெலலாம உணரச் செய்வன, அவர்க்கு எய்திய அரசர் பெருமான் முதலோர் அளித்த பெருஞ் சிறப்புக்கள், பன் ஞடுகளிலு முள்ள செல்வப் பொருள் நிலைகள், உலகமே போற்றும அணுமலை நகர வாழ்வுகள், தமிழ் நாட்டில் பறபல கோயில்களில் அமைத்த திருப்பணிகள் முதலாவன ஆகும்.

இம் மன்னரது வாழ்க்கை வரலாறு எழுதப்பெறுங் கால். அது உலகிற பெருஞ் சிறப்பு வாய்ந்த எவர் சிறப் பிற்கும் பின்னிற்ப தாகாமை நன்கு புலனுகும

இவரது பெருஞ் சிறப்பை நன்கு உணர்ந்து, என்றும் போற்றிவரும இச் சங்கம, 'செட்டிநாட்டரசரெனத் திகழ் தமிழ்நாட் டரசிவரைச் செப்புவாரே!' என்றெல்லாம் பற்பலவாறு புகழ்ந்து கொண்டாடி வந்துளது நம சங்கத்திற்கு அவாகள் செய்துள்ள பொருளுதவியும அரு ளுதவியும் சிறப்புடையவாம.

இவரது அருஞ் செயல்கள், தலைப்பு அளவில் கூறினும, அண்ணுமலைப் பலகலைக் கழகம், அண்ணுமலை இசைக் கல்லூரி, காஞடுகாத்தான் பெண்டுலண்டு சீமாட்டி மருத்துவசாலை, தமிழிசைச் சங்கம, என இங்ஙனம் பல வாறு விரியும்.

இம் மன்னர் இறைவனடியில் மகிழ்ந்து வாழவும், இவரது நல்லறங்கள் ஓங்கிப் பொலியவும், இவரது செல்வ மைந்தர்கள் முதலாய குடும்பமும் சுற்றமும நீடூழி சிறந்து வாழவும் வேண்டுகின்றேம்.

# கரந்தைப் புலவர் கல்லூரி.

## மகிழ்ச்சி யுரை.

சென்னைப் பல்கலைக் கழகத்து வித்துவான் (புலவர்) 1948 ஆம் ஆண்டுத் தேர்ச்சியில், முடிநிலை, முதனிலை, புகுநிலை, எனும் மூன்று பிரிவுகளிலும், இக் கல்லூரி சிறந்த தேர்ச்சியுற் றிருத்தலை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

### தேர்ச்சி நிலை

| பிரிவுகள் | சென்ற மாணவர் எண் | முதல் தரம் | இரண்டாந் தரம் | மூன்றாந் தரம் | ஆகத் தேர்ச்சி பெற்றோர் எண் | வெற்றி அளவு % |
|---|---|---|---|---|---|---|
| முடி நிலை | 10 | 1 | 6 | 3 | 10 | 100 |
| முதனிலை | 8 | 1 | 1 | 5 | 7 | 88 |
| புகுநிலை | 14 | ... | ... | ... | 9 | 64 |

இக் கல்லூரியின் தலைவர், ஆசிரியர்களின் புலமை, திறமைகள், மாணவர்களின் ஊக்கம், பயிற்சிகள் ஆய சிறப்புக்களை, இவ்வெற்றி நன்கு புலப்படுத்துகின்றது.

இக் கல்லூரி மாணவர்கட்கு வேண்டும் உணவு விளக்கு முதலியன அளித்துப் போற்றிவரும் பெருங் கொடைத் திருவாளர்களுக்கு நம் சங்கத்தின் பெருநன்றி செலுத்துகின்றோம்.

# கரந்தைப் புலவர் கல்லூரி.

## சென்னைப் பல்கலைக் கழகத் தேர்வு முடிபு—1948

| | அனுப்பப்பெற்றவர் | | வெற்றிபெற்றவர் | வெற்றி அளவு |
|---|---|---|---|---|
| | | | புகு நிலை | % |
| 1945 | 8 | | 7 | 88 |
| 1946 | 7 | | 6 | 86 |
| 1947 | 12 | | 9 | 75 |
| 1948 | 14 | | 9 | 64 |
| | | | முதனிலை | |
| 1945 | 13 | | 9 | 69 |
| 1946 | 12 | | 10 | 83 |
| 1947 | 12 | | 12 | 100 |
| 1948 | 8 | | 7 | 88 |
| | | | முடி நிலை | |
| 1945 | 6 | I—1 | | |
| | | II—2 | | |
| | | III—2 | 5 | 83 |
| 1946 | 13 | I—3 | | |
| | | II—1 | | |
| | | III—6 | 10 | 77 |
| 1947 | 14 | I—3 | | |
| | | II—4 | | |
| | | III—6 | 13 | 93 |
| 1948 | 10 | I—1 | 10 | 100 |
| | | II—6 | | |
| | | III—3 | | |

## இவ்வாண்டில் வெற்றிபெற்ற மாணவர்கள்

### முடி நிலை

முதல் தரம் — இளங்கோவன், சி.

இரண்டாம் தரம்
க. காசிநாதன், சி.
உ. குலசேகரன், ச.
ந. மாரியப்பன், ஈ. வீ.
ச. குப்புசாமி, சிவ.
ரு. சாமியையா, ஏ.
சு. வேலாயுதம், ஏ.

மூன்றாந் தரம்
க. மருதவாணன், சா.
உ. சிவஞானம், கோ. தி.
ந. சிவராம முத்துக்குமாரவேல், என்.

### முதனிலை

முதல் தரம் — பாலசுந்தரம், சி.

இரண்டாம் தரம் — நாராயணசாமி, கு. மா.

மூன்றாந் தரம்
க. அரங்கநாதன், கே.
உ. துரைமாணிக்கம், பெ.
ந. இராசமாணிக்கம், ம.
ச. அரங்கராசன், இராம.
ரு. சோமசுந்தரம், அ.

### புகு நிலை

க. அண்ணுச்சாமி, கே.
உ. அருணுசலம், என்.
ந. இலக்குமணன், என்.
ச. கோவிந்தராசலு, ஆர்.
ரு. காசிநாதன், சி.
சு. மாணிக்கம், பி.
எ. பழநிமாணிக்கம், எம்.
அ. இராமராசன், என்.
கூ. சுப்பையன், டி.

# கணேசர் செந்தமிழ்க் கல்லூரி
## மேலைச்சிவபுரி.
### புதுக்கோட்டை வழி.

சீரிய தமிழும் சைவமும் தழைப்பதே தன் நோக்க மாகக் கொண்டு, சென்ற முப்பத்தொன்பது ஆண்டுகளாக இடையறாது தொண்டாற்றி வரும் மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபையினுதவில் நடைபெற்று வரும் கணேசர் செந்தமிழ்க் கல்லூரி, சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப் பெற்றுத், தனித் தமிழ் வித்துவான் வகுப்புக்களை நடத்தி வருகின்றது யாவருக்கும் தெரியும்.

இவ் வாண்டில் நடைபெற்ற சென்னைப் பல்கலைக் கழகத் தேர்வில் இக் கல்லூரி மாணவர்கள் மிகச் சிறப்பான வெற்றி பெற் றுள்ளார்கள். முடி நிலை வகுப்புத் தேர்வுக்குச் சென்ற நான்கு மாணவரில் இரண்டு மாணவர்கள் முதல் வகுப்பிலும் இரண்டு மாணவர்கள் இரண்டாம் வகுப்பிலும் தேர்ச்சி பெற் றுள்ளார்கள். புகுநிலை வகுப்புக்கு எழுதிய ஐந்து மாண வரும் வெற்றிபெற் றுள்ளனர்.

முல்லைக்குப் பொற்றேர் ஈந்த பாரி வள்ளல் ஆண்ட பறம்பு நாட்டில், இயற்கை வளங்கள் செறிந்து, கல்வி கற்க இனிய சூழ லமைந்த இக் கல்லூரி, சிறப்பு மிக்க ஆசிரியர் குழாத்தைப் பெற்றுள்ளது; தகுதி வாய்ந்த மாணவர்க்குப் பொரு ளுதவி செய்கின்றது.

இக் கல்லூரியில் சேர விரும்பும் மாணவர்கள் விரைவில் 1½ அணு தபாற் றலை யனுப்பி, விண்ணப்பத் தாள் பெற்று விண்ணப்பம் செய்து கொள்வார்களாக.

கல்லூரி 5—7—'48 இல் திறக்கப்பெறும்.

முதல்வர்.

# வள்ளுவர் கண்ட தமிழ்நாடு

வித்துவான். சி. மணிவாசகன், தமிழாசிரியர்,
செயிண்ட் ஜோசப் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, மன்னார்குடி.

பழமையும் பெருமையும் பொருந்தி, சிறந்த முறையும், நிறைந்த குணமும், விரிந்த உள்ளமும், பரந்த நோக்கமும் கொண்டு, உலகத்தோ டொட்ட ஒழுகும் புதுமைக் கருத்துக் களை எள்ளா தேற்கும் இயல்பு வாய்ந்த நந் நாடே, உறைந்த நாகரிகம் மன்னிய பொன் னுடென எந் நாட்டுப் புலன்கா உழவரும் போற்றும் ஏற்றங் கொள் இயல்பு வாய்ந்தது.

அவ் விய லமைந்தவாறே, பழமையினும், செழுமையினும், பெருமையினும உரிமை யெய்தி, இலக்கிய விரிவும், இலக்கண வரையு முற்று, உலக மொழிகள் பலவற்றிற்கும் தலைமையும், அவற்றின் மிகவே தக வுடைமையும் பெற்று, அயன் மொழிக் களைகளைக் களைந்து, அம் மொழிக் கலைகளைக் குறையா தேற்றுத், தன் னியல் பாக்கும் சொல் வள மேற்று, உயர் தனிச் செம்மொழிக் குரிய இலக்கணங்களுக் கிலக்காய், அன் றும், இன் றும். என் றும் உலக வழக் கழியாத திருந்திய பண்பினைக் குறைவின் றி நிறைவாகப் பெற்றுத், தன்னே ரில்லாப் பெருமபே ராற்றலை அணியாக வுற்ற அமிழ் தன்ன இனிமைசால் மொழியே, சிறந்த நாகரிக முடைய மக்களால் பேசப்படும் மொழி யென மொழிநூ லறிஞர் மொழியும் அழியாத ஏற்றம் வாய்ந்தது.

எனவே, இவ் வியல் வாய்ந்த செவ்வியல் மொழியைத், தம் உரிமைத் தாய்மொழியாகக் கொண்ட மக்கள் வாழும் மா நிலமே யாநிலத்தும் மேனில மெனக் கருதும் நாகரிக நாடாகும்.

ஆகவே, இவ் வியல்புகளைப் பழுதின்றி முழுது முடைத்தாய், நறை யுறு நிறை புனல் கரை பொரு காவிரி திரை யுறு சோழ வளநாடும், பொய்யாப் புகழுடைத் தொய்யா விழுச் சீர் வளங் கெழு வையை சூழ் நாடும், சந்தம் பூழிலொடு பொங்கு நுரை சுமந்து வெண்டலைச் செம்புனல் அஞ்சும் ஒலியொடு வஞ்சி சூழ் நாட்டை வளமுறச் செய்து தென்கடல் முன்னும் தண்மலை நாடும், வளங் கெழு சிறப்பிற் பெரும்பல் யாணர்க் கூலம் பகரும் மங்காப் புகழ் சூழ் கொங்கர் நாடும், சான்றோர் உடைத்தென ஆன்றோர் கூறிய தொண்டை நாடும் செறிந் திருத்தலான், செந்நெற் கரும்பாய்ச் செழிக்கும் வளமும், கன்னற் கமுகாய் விண்ணுற வளர்ந்தும், பூங்கரும் புடைந்த தீஞ் சாறடு புகை காரெனக் கண்டு களிமயில் அகவவும், இன்னணம் பற்பல காட்சியின் மாட்சியால் கவின்பெற்றுத், தள்ளா விளையுளும் வள்ளற் றன்மையாற் றக்கா ராகிய தாழ்வில்லாச் செல்வரும் சேரப்பெறலான், கேடின்மை கூடி, அல்ல லுற்ற அணிமை நாட்டினரும், செல்ல லுற்ற சேய்மை நாட்டினரும் அளவிறந்த பெரும் பொருளின் பெற்றியை முற்றக் கேட்டுப் பெட்டக்க தாகி, வற்கடங் கண்ட சொற்பல கொண்ட பற்பல நாடுகளின் பொறை யொருங்கு மேல் வருங்கால் இரங்கா தேற்றும், இறைவர்க் கிறையைக் குறையா தளிக்கும் நேர்மை யுற்று, உறுபசியும் ஓவாப் பிணியும், செறுபகையும் சேராத நீர்மை பெற்று, மாறுபடும் பல் குழுவும், வேறுபடும் உட்பகையும், வேந்தலைக்கும் கொல்குறும்பும் இன்றி, இரு புனலும், வாய்ந்த மலையும், வரு புனலும், வல் லரணும் நாட்டிற் குறுப்பாய் அமைந்து, நாடா வளத்தனவாய், வேட்ட மாற்றா ராற்றும் கேடறியாது, அரிதிற் கெட்ட விடத்தும் வளங் குன்றாத் தலைமை பொருந்திப், பிணியின்மை, செல்வம், விளைவு, இன்பம், ஏமம் என்னும் ஐந்திணையும் அணியாகக் கொண்டு, அமைவுடைய தனி அரசியல் உரிமை கொண்ட தான தனி நாகரிக அரசு தென்னாட்டில் ஏற்படுத்தப் பட்டுக் கலங்க மறத் துலங்கியது இற்றைக்குச் சற் றேறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னே வாழ்ந்த வள்ளுவர் கண்ட தமிழ்நாடு.

# திருக்குறள்

## பொன்னுரைப் பகுதிகள்.

உரைகாரர்: கொக்குவில், திரு. வ. பொன்னையா, B.A. (Hons)., Ph.D.

### தவம்.

(முற்றொடர்ச்சி; துணர் 23, மலர் 10, பக்கம் 308.)

4. உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை
யற்றே தவத்திற் குரு.

இ-ள். தவத்திற்கு உரு — தவத்தினது வடிவு; உற்ற நோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை அற்று — தம் முயிர்க்கும் பிற வுயிர்கட்கும் வருந் துன்பங்களைப் பொறுத்தலொடு கூடிநின்று தாம் அவற்றிற்குத் துன்பஞ் செய்யாமையைப் போலும்; ஆகலான் தவஞ்செய்க எ-று.

ஏகாரம் அசைநிலை. அற்று என்பது உவம வாய்பாட்டுப் பொருளில் வந்த குறிப்பு வினைமுற்று. அதனைத், 'துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத், திறந்தாரை யெண்ணிக் கொண்டற்று' என்பதனாலு மறிக. தவத்திற்கு என்பதில் நான்க னுருபு ஆறுவதன் கிழமைப் பொருட்கண் வந்தது.

முன்னர் தவஞ் செய்வா ராவார் தங்கருமஞ் செய்வார் என்று கூறியவர், பின்னர் புறத் துறவு பூணுதார் தவஞ் செய்யாமை எதனால் ஆயது என்று ஆராய்ச்சியை விளைத்து நின்று, அதன் பின்னர் முற் றவ முடையாரே மறுமைக் கண் வீடுபே றடைவர் என்று வற்புறுத்தி நிற்ப, அத் தவந் தான் எத்தன்மைத்து என்றாற்கு, யாவரானு மொருவகை யானறியக் கிடந்த உற்ற நோய் நோன்றலும் உயிர்க் குறு

கண் செய்யாமையு மாகிய சாதனங்களொடு சார்த்தித், தவத்தினது வடிவு உற்றநோய் நோன்றற் சாதனத்தொடு கூடி நின்று உயிர்க் குறுகண் செய்யாமையைப் போலும் என்று ரென்க.

தங் கரும மாகிய தவஞ் செய்வா ராவார், தம் முயிர்க்கு வருந் துன்பங்களையே யன்றிப், பிறவுயிர்களுக்கு வரும் துன்பங்களையும் பரிதன் மாத்திரையா னன்றிப், பொருத வழி அத் துன்பங்களை நீக்க முயல்பவராய்த் தங் குறிக் கோளைக் கைவிட்டுத் தவநெறி தப்பியவ ராவார் என்பத னுலும், பொறுக்கும் வழியே தம் மனம் தம் வயப்பட்டு அடங்கிக் கிடக்கு மென்பதனுலும், அவர்க்கு உற்றநோய் நோன்றற் சாதனம் வேண்டியவா ருயிற்று.

இனித், தம் முயிர்க்கும் பிற வுயிர்கட்கும் துன்பம் பயக் கும் பாவ நினைப்புள்ளார் மனம் அப் பாவ நினைப்பானே தவ நினைப்பை யழித்துவிடும் என்பதனுலும், அந்நினைப் பின்றி யவர் மனமே தவஞ் செய்தற்கு அமைவுடைத்து என்பதனுலும், தவஞ் செய்வார்க்கு உயிர்க்குறுகண் செய் யாமைச் சாதனமும் வேண்டியவாறு காண்க.

ஏனைச் சாதனங்களும் பல தவஞ் செய்தற் குதவுவன உண்டெனினும், அவையெல்லாம் இவற்றின் மூலமாகவே யன்றித் துணை செய்யா வென்பது கருதி இவ்விரண் டையுமே விதந்தோதினு ரென்க.

இக்குறளுக்குப் பரிமேலழகர் 'தவத்தின் வடிவு உண்டி சுருக்கல் முதலியவற்ருல் தம்முயிர்க்கு வருந் துன்பங்களைப் பொறுத்தலும் தாம் பிற வுயிர்கட்குத் துன்பஞ் செய்யாமையு மாகிய அவ்வளவிற்று' என்று பொருள்கூறி இப்பாட்டால் தவத்த திலக்கணங் கூறப் பட்ட: தென்ருர்.

'தவஞ் செய்வார் தங்கருமஞ் செய்வார்' என்ற குறளில் 'தவத்தினைச் செய்ய உயிர் ஞானம் பிறந்து வீடு பெறும்' என்று விளக்கந் தந்த அழகியார்க்கு, தவமானது வீடுபேருகிய பயனை அளிக்குமென்பது பற்றி நிவிருத்தி மார்க்க மென்பது உடம்பா டாகையான், தவத்திலக்கணம் நிவிருத்தி பிரவிருத்தி யென்னும் இரண்டு மார்க்கங்களுக்கும் பொதுவாய் உற்றநோய் நோன்றலும் பிறவுயிர்க் குறுகண் செய்யாமையு மாகிய அவ்வளவிற்று என்பது சாலா தென்க.

இனி, இவ்வதிகார வெடுப்பில் தவ மென்பது பிறவுயிர்களை யோம்புதல் என்று கூறிப் போந்தவர், ஈண்டு, தாம் கொண்ட இலக்கணத்திற் குறைபாடு படக் கூறுவது அவர் புகழை உயர்த்தா தென்பது காண்க.

இனி, இக்குறளில் உள்ள ஏகாரத்தைத் தேற்றேகார மெனக் கூறி, தவத்தினது வடிவு அவ்வளவிற்று என்று பிரிநிலைப் பொருள்பட உரைசெய்தா ராகையால், இவர் பிரிநிலைப் பொருளை யடிக் கொண்டே தேற்றேகாரம் வரும் என்பவர் மதத்தை யுடன்பட்டவருமாய், தேற்றேகாரத்திற்கு ஒரு சிறப்புங் கொடாதவருமாய்,

> தேற்றம் வினவே பிரிநிலை யெண்ணே
> யீற்றசை யிவ்வைந் தேகா ரம்மே.

என்பதனுல், தேற்றப் பொருளுக்கு முதன்மை கொடுத்த தொல்காப்பியர் கருத்தொடு முரணியவரு மாவர். ஆகலான், அழகியா ருரை உரையன்மை அறிக.

இப்பாட்டு உற்றநோய் நோன்றற் சாதனத்தொடு பட்ட உயிர்க்குறுகண் செய்யாமைச் சாதனந் துணை கொண்டு தவஞ்செய்க எ-து.

5. தன்னுயிர் தானறப் பெற்றுனை யேனைய
மன்னுயி ரெல்லாம் தொழும்.

இ-ள். தான் தன்னுயிர் அறப் பெற்றானை — தான் என்பது தன்னுயிரென்று உணரும் உணர்வைத் தவஞ் செய்து தெளிவாகப் பெற்றானை, ஏனைய மன்னுயிர் எல்லாம் தொழும் — அவன் விரும்பின் பெற்றனவும் பெறுதனவு மாகிய ஏனைய நிலைபெற்ற உயிர்களெல்லாம் தொழும்; ஆகலான் தவஞ்செய்க எ-று.

தன்னுயிரென்பது பிறிதின் கிழமைப் பொருள் தராது தலை மாத்திரையாய் நிற்கும் இராகுவை இராகுவினது தலையென்று கூறும் வழக்குப் போன்று, ஒற்றுமைப் பொருள் தந்து நின்றது.

தான் என்பது, உடம்புக்கும், பொறிகளுக்கும், அந்தக் கரணங்களுக்கும், பிராண வாயுவுக்கும், இவற்றின் கூட்டரவிற்கும் வேறான உயிரென்றும், அவ்வுயிர் அதுவதுவாய் அழுந்தி நின்றறியுந் தன்மையையே தன் சிறப்பியல்பாகக் கொண்டுள்ள தென்றும், அதுதானும் அறிவித்தாலன்றி யறியா தென்றும், இனி அதன் சிறப்பியல்பாகிய காரணத்தானே அது பாசத்தோடு சார்ந்துழி அதற்குப் பாச ஞான மாகிய ஏகதேச வுணர்வு நிகழு மென்றும், இது அதற்குச் செயற்கை யென்றும், இறையோடு சார்ந்துழியே அதன் சிறப்பியல் பாகிய பேரறிவு நிகழு மென்றும், இதுதானே அதற்கு இயற்கை யென்றும், அளவைகளானும் பொருந்து மாற்றானு மறிந்து அதன் சிறப்பியல்பு விளங்குதற் குரிய சிவோகம்பாவனை யாகிய தவத்தை அது முயன்று நிற்பின், ஏனைய உயிர்களெல்லாம் அத் தவ முயற்சி காரணமாக விளையும் அருட்செறிவி னுட்பட்டு அறிந்தும் அறியாமலும் அதன் வயப்பட்டு நிற்கும் என்றவா றாயிற்று.

இனித், தான் என்பது தன்னுயி ரென்று அளவை மாத்திரையான் அறியு மறிவானது கேட்டல், சிந்தித்தல் தெளிதல், நிட்டை யென்னும் நான்கு திறத்தா னன்றி

அனுபவமாத்திரையுட் படாதென்பதும், இவ் வனுபவத்தி னூங்குப் பெறற் பாலதோர் பொருளு மில்லை யென்பதுந் தோன்ற 'அறப்பெற்றானை' யென்றா ரென்க. அவன் விரும்பாமையே இயல்பு என்பதை யுட்கொண்டு 'அவன் விரும்பின்' என்று கூறப்பட்டது.

இக் குறளுக்குப் பரிமேலழகர், 'தன்னுயிரைத் தான் றனக் குரித்தாகப் பெற்றவனைப் பெறுதன வாகிய மன்னுயிர்க ளெல்லாந் தொழும்' என்னும் உரையையும், 'தனக் குரித்தாதல் தவ மாகிய தன் கருமஞ் செய்தல் ......சாபமு மருளு மாகிய இரண் டாற்றலு முடைமையின் தொழு மென்றார்' என்னும் உரை விளக்கத்தையுந் தந்தார்.

தவ மாகிய தன்கருமஞ் செய்வானை அன்னா னென் றறி பவர் மக்களுட் சிலரே யாவர். அவருள்ளும் அவனுடைய சாபத்திற்கு அஞ்சியேனும், அருளை வேண்டியேனும் அவனைத் தொழுவார் மிகச் சிலரே யாவர். தொழுவார் தொகை சிறிதா யிருப்ப, பெறுதன வாகிய மன்னுயிர்க ளெல்லாந் தொழு மென்று பரிமேலழகர் கூறினமை, ஆசிரியர் உபசாரம்பட மொழிந்தா ரென்னுங் கருத் தானே யன்றிப் பிறிதில்லை யெனல் வேண்டும். ஆசிரியர் இதனை உபசாரமாக வன்றிச், சித்தாந்தமாகவே கொண்டா ரென்பது காட்டப்பட்டுள்ளது. ஆகவே, அழகியார் ஆசிரி யர் கருத்தைத் திரியக் கண்டு, உரை வழீஇனா ரென்க.

இப்பாட்டு என்னுதலிற்றோ வெனின், தவ முதிர்ச்சி யுடையான் மாட்டு மன்னுயி ரெல்லாம் வயப்பட்டு நிற்கு மாகலான் தவஞ் செய்க எ-து.

6\. சுடச்சுடரும் பொன்போ லொளிவிடுந் துன்பஞ்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.

இ-ள். சுடச் சுடரும் பொன்போல்—பொற்கொல்லர் மாசொடு விரவிய பொன்னைத் தீயின் கண்ணே பொருத்தி அம்மாசுப் பிடிப்பைக் கெடுக்கக் கெடுக்க அம்மாசு நீங்கி

அது ஒளிவிடுமாறு போல, நோற்கிற்பவர்க்கு துன்பஞ் சுடச் சுட ஒளிவிடும் — தவஞ்செய்ய வல்லார் மலத்தொடு விரவிய தம்முயிரைத் தவத்தின் கண்ணே பொருத்தி அம் மல சத்தியைக் கெடுக்கக் கெடுக்க அம் மலம் நீங்கி அது பேரறிவைத் தலைப்படும்; ஆகலான் தவஞ் செய்க எ-று.

துன்பம் என்பது காரிய வாகுபெயராய் ஏகதேசவறி வாகிய துன்பத்தைப் பயக்கும் மலசத்தியைக் குறித்து நின்றது. பொருளில் சுடச்சுட வென்ற அடுக்கு நிற்பதால் உவமானத்தில் ஒருசொல் வருவித்துச் சுடச்சுட வென அடுக்காக்கி உரைக்கப்பட்டது. உவமானத்தில் சுடுதல் மாசுப் பிடிப்பின் மேலும், அதுகாரணமாகச் சுடர்தல் பொன்மேலும் நிகழ்தல்போல, பொருளில் சுடுதல் மல சத்தியின்மேலும், அதுகாரணமாக ஒளிவிடுதல் உயிரின் மேலும் நிகழுமாறு கூறப்பட்டது. உயிர்க்கு ஒளிவிடுதல் என்பது, அது பேரறிவைத் தலைப்படுத லென்னும் பொருட்டு. தீயிற் றோன்றிய சுவாலை மாசுப்பிடிப்பைக் கெடுத்துப் பொன்னை ஒளிவிடுமாறு செய்யும். அதுபோல தவத்தான் நிகழும் மெய்ஞ்ஞானம் மல சத்திகளைக் கெடுத்து உயிரின் பேரறிவை விளக்கும் என்றுராயிற்று. ஈண்டுச் சுடுதலென்பது இருவழியும் பிடிப்பைக் கெடுக்கு முகத் தானே குற்றம் நீக்கிப் பொருள்களை விளக்குதற் கேது வாய் நின்றது. மலம் என்பது ஆணவம், கன்மம், மாயை என மூன்று வகைப்படும்.

அறிதற் குண முடைய உயிர்க்கு அறியாமை உளதாதல் இயற்கையா னன்றிச் செயற்கையானே யென்றும், அச் செயற்கை யறியாமைதானும் ஒரு காரணமு மின்றி உண் டாதல் ஆகாமையான் அது அநாதியே உயிருடன் மருவி நின்றதும் அநந்த சத்திக ளுடையது மான ஆணவமலத்தா னுயதென்றும், அம்மலப் பிடிப்பானே உணர்வின்றிக் கிடப்பின் அதற்கு அறிதல் இயலாதாகையான், அது

விடயங்களை யறியுமாறு அதனறிவை விளக்குதல் சுத்த மாயை அசுத்தமாயை யென்னும் இருவகை மாயையின் செய்தியென்றும், அவ் வசுத்த மாயைதான் ஏகதேசத்தான் கலாதி தத்துவங்க ளாயும் அந்தக்கரணாதிக ளாயும் காரியப்பாடு அடையுமென்றும், அம் மாயா காரியங்க ளாகிய அந்தக்கரணாதிகளுடன் ஒற்றித்து நின்றே அவ் வுயிர் புறப்பொருள்களை அறியு மென்றும், அது அறிந் தாங்கு நில்லாது நல்வினை தீவினை யென்னும் இருதிறப் பட்ட கன்ம மென்னும் ஒருமலத்துடன் விரவிநின்று அவற்றா னாய இன்ப துன்பங்களை நுகரு மென்றும், இம் மும்மலப் பிணிப்பானேதான் அதற்குப் பிறப்புப், பிணி, மூப்புச், சாக்காடுகள் உளவாத லென்றும், அளவைகளா னும் பொருந்து மாற்றானு மறிந்து அப் பிணிப்புகளை நீக்கிக் கோடற் பொருட்டு, அது நல்வினை தீவினை யென்னும் வினைக ளிரண்டையும் பிறப் பிறப்புக்களை உளவாக்குதற் காரணத்தான் உவர்த்துவிட்டு, அதனால் இருவினை யொப் புக் குறியைத் தன்கண் உளதாக்க, இக் குறியே காரணமாக மலபாகக் குறியும், அதன் வழியாகச் சத்திநி பாதக் குறியுந் தோன்றி, ஞானாசிரியர் கிடைக்கப் பெற்று, அவர் செய்யுந் தீக்கையானே மேலைக்கு வித்தாய் விடப்பெற்ற சஞ்சித வினை எரி சேர்ந்த வித்துப் போலக் கெட்டொழிய, அதன் பின்னர் அவர் தந்த ஞான சாதனத்தின் உறைத்து நிற்ப, அச் சாதன முதிர்ச்சியின் தலைப்பட்ட மெய்ஞ்ஞானந் தானே ஏனைய மலசக்திகளைக் கெடுத்துப், பாசவீடும் வீடு பேறு மாகிய பயன்களை உதவி, அவ் வுயிர்க்குஅதன் சிறப் பியல் பாகிய பேரறிவை மிளிரச் செய்யு மென்ப தாயிற்று.

இக் குறளுக்குப் பரிமேலழகர் 'தீயின்கணூடும் பொன்னுக்கு அது சுடச்சுடத் தன்னொடு கலந்த குற்றம் நீங்கி ஒளிவிடுமாறுபோல, தவஞ்செய்ய வல்லார்க்கு அத னால் வருந்துன்பம் வருத்த வருத்த தம்மொடு கலந்த பாவ நீங்கி ஞானமிகும்' என்னும் உரையையும், 'சுடச் சுடரும் பொன்போ லென்றா ராயினும் கருத்து நோக்கி இவ்வாறு

உரைக்கப்பட்டது' என்னும் உரை விளக்கத்தையுந் தந்தார். இவர் தம் முரையில் உவமானமும் பொருளும் ஒன்றுக்கொன்று ஒவ்வாமை தம்முரை விளக்கத்தானே காட்டினு ராதலின், இவர் ஆசிரியர் கருத்தை நோக்கினு ரல்லர் என்பது தேற்றம்.

இப்பாட்டு என்னுதலிற்றோ வெனின், தவஞ் செய் யின் மெய்ஞ்ஞானந் தலைப்பட்டு மலப் பிடிப்புக்களைக் கெடுக்கு முகத்தானே பேரறிவை வெளிப்படுத்தும்; ஆகலான் தவஞ் செய்க எ-து.

7. கூற்றங் குதித்தலுங் கைகூடு நோற்றலி
ளுற்ற றலைப்பட்ட வர்க்கு

இ-ள். நோற்றலின் ஆற்றல் தலைப்பட்டவர்க்கு-தவங் காரணமாகச் சிவசத்துடன் சார்ந்து தம் சிறப்பியல்பு மாத்திரையான் நிற்றலாகிய தம் ஆற்றலைத் தலைப்பட்ட வர்க்கு, கூற்றம் குதித்தலுங் கைகூடும் — கூற்றத்தைக் கடத்தலும் கைகூடும்; ஆகலான் தவஞ்செய்க எ-று.

உம்மை உயர்வுசிறப்பு. எதிர்மறை யும்மையு மாம். எதிரது போற்றிய வெச்சவும்மை யெனினு மாம். ஐந்த னுருபு காரகவேதுப் பொருட்டு. இறந்த காலத்தொடு வந்த வினைப்பெயர் நிகழ்காலத்தொடு மயங்கியதை 'மிக்கதன் மருங்கின் வினைச்சொற் சுட்டி' என்றற் றொடக்கத்துச் சூத்திரத்தா னமைக்க.

வீடுபேற்றின் பொருட்டுச் சிவோகம்பாவனை யாகிய தவஞ்செய்வா ராவார் உயிர்க்கு ஏகதேச வறிவெல்லாம் தூலவறி வாகலான், அவை அதற்கு இடையே விளங்கி மறையும் பொது வியல் பென்றும், மாணிக்கத்தைச் சார்ந்த படிகம்போலச் சார்ந்ததன் வண்ணமாய் நின்று அறிதலே அதற்கு எக்காலத்தும் நிலைபெற்றுள்ள தாகிய சிறப்பியல்

பென்றும், இப் பொது வியல்பு பெத்த நிலையில் விளங்கியும் முத்தி நிலையில் விளங்காதும் நிற்கு மென்றும், இச் சிறப் பியல்பு பெத்தத்தினும் முத்தியினும் விளங்கியே நிற்கு மென்றும் அளவைகளாற் றுணிந்து, சிவசத்துடன் சார்ந்து தம் சிறப்பியல்பு மாத்திரையான் நிற்பதே தம் மைப் பந்திக்கா தென்று உணர்ந்து தவத்தினைச் செய்யச் செய்ய அவருடைய அறிவைத் தடுத்து நின்ற ஆணவ மலமும் தன் சத்தி சிறிது சிறிதாகத் தேயும். அது தேயத் தேய அவருடைய பொது வியல்பாகிய ஏகதேச வறிவு சிறிது சிறிதாக விளங்கி விளங்கி மேம்பட்டு வந்து வியாபக மாகும். அது வாக வாக அவர் சிவத்துவம் தம்பால் விளங்குவ தாகிய தம் சிறப்பியல்பைத் தலைப்பட்டா ராவர். அத்தலைப்பட்ட துணையானே அவர் பிறரால் அடைதற் கரிய சிறப்பு வாய்ந்த கூற்றத்தைக் கடத்தல் முதலிய சித்தி களை எய்துவர். அவரது உயர்வை அவர்க்குக் கூற்றங் குதித்தற் சித்தியுங் கைகூடு மென்று சிறப்பித்தமையின், உம்மை உயர்வுசிறப் பும்மை யாதல் காண்க.

இனி, இச் சித்திக ளெல்லாம் உயிரைப் பந்த முறுத்து தற் பயத்தன வென் றுணர்ந்து, அவற்றை யுவர்த்துவிட்டுச், சிவத்துவம் முழுவதும் தம்பால் விளங்குவதாகிய தம் சிறப் பியல்பு மாத்திரையான் நிற்றற்குப் பின்னருந் தவத்தின் முயலுவர். அதன்கண் முயல முயல அம் மலசத்தியுந் தேய்ந்து தேய்ந்து வாதனை மாத்திரையான் நிற்கும். அது அவ்வாறு நிற்க, அவர் சிவத்துவம் முழுவதும் தம்பால் விளங்கும் தம் சிறப்பியல்பைத் தலைப்பட்டா ராகலான், ஒரு புடை அசத்துச் சார்பொடு நிற்றற்கண் தமக்கு நேர்ந்த கூற்றங் குதித்தல் முதலிய சித்திகள் அவற்றின்கண் கருத் தின்றிய காரணத்தான் மறையும். கடத்தற் குரியவர் அவரே யாயினும், இந் நிலையில் அவர்க்குக் கடத்தல் ஏலா தாகையான், கடவாமையுங் கைகூடும் என்று கூற உம்மை எதிர்மறை யும்மை யாமாறு காண்க.

கூற்றங் குதித்தல் முதலிய சித்திகளாவன, சிவத்துவம் முழுவதுந் தம்பால் விளங்காதவழி நிகழ்வன வாகலான், அது அவ்வகை தம்பால் விளங்கப் பெற்ருர்க்கு அவற்ற தின்மை மேம்பா டாவதன்றி இழுக்காகா தென்க.

இனி, அவ் வாதனை மாத்திரையாய் நின்ற மலமும் கழிந்தொழியின், அவர்க்கு வீடுபேருகிய பயன் உண்டாகும். ஆகையான், இக் குறளுக்கு உரை செய்யுழி, 'தவங் காரண மாகத் தம் சிறப்பியல் பாகிய தம் ஆற்றலைத் தலைப் பட்டார்க்குக், கூற்றங் குதித்தலும் கைகூடும்; வீடுபேறடை தலுங் கைகூடும்' என்று கூறி உம்மையை எதிரது போற்றிய வெச்ச வும்மையாக உரைப்பினு மமையு மென்க.

வேருேருரை.

நோற்றலின் ஆற்றல் தலைப்பட்டவர்க்கு — தவங் காரணமாகச் சிவசத்தைச் சார்ந்து தம் சிறப்பியல்பு மாத்திரையான் நிற்றலாகிய தம் ஆற்றலைத் தலைப்பட்டவர்க்கு; அங்கு கூற்று உதித்தலும் கைகூடும்—அந் நிலையில், தனக்கொரு உபகாரமும் வேண்டாது உயிர்க்குயிராய் நின்ற திட்டித்துத் தம்மை நன்னிலைப் படுத்திய பெருங் கருணைப் பேரின்பப் பிழம்பாகிய இறைபால் தம் அன்பை வெளிப் படுக்குங் கூற்று உண்டாதலுங் கைகூடும், ஆகலான் தவஞ் செய்க எ-று.

அவ்வகைக் கூற்று நிகழ்ச்சியைத் தேவார திருவாசகங் களா னறிக.

அறிவித்தா லன்றி ஒரு விடயத்தையு மறிதல் முடியாத உயிரானது, தன் முதலாகிய இறைக்குத் தான் எக்காலத்து மடிமை யென உணர்ந்து, மும்மலப் பிணிப்பும் உடலு மாய் ஒழியுமாறு சிவோகம் பாவனை செய்து இறை பணி நிற்றற்

கண் பேரின்பம் பிறக்கும். ஒரோவழிப் பரிசயத்தான் மல வாசனைகள் வந்து மெலிதாகத் தாக்கின், நிழலி னருமை வெயிலி னடைந்தார்க்கே தெரிவது போன்று நின்று தன் முதல் தனக்குச் செய்தலும் கைமா றற்றது மான பெருங் கருணைப் பேருதவியை நினைந்து நினைந்து தன் அன்பை வெளிப்படுக்குங் கூற்றுக்களை நிகழ்த்தும் இந் நிலை அதற் குச் சிவத்துவம் முழுவதும் அதன்பால் விளங்காத நிலை யாயினும், பிற வுயிர்களால் அடைதற் கரிய சிறப்பு வாய்ந்த அருட் கூற்று உதித்தற் குரியது. ஆகையான் அவ் வுயி ரினது உயர்வை இந் நிலையில் அதற்கு அருட் கூற்றுதித்தற் சித்தியுங் கைகூடு மென்று சிறப்பித்தமையின், உம்மை உயர்வு சிறப்புப் பொருட் டாதல் காண்க.

இனி, அம் மல வாசனைகளும் முறுகின் மேலைக்கு வித் தாகு மென வுணர்ந்து, அவை தேய்ந்து தேய்ந்து கெட் டொழியுமாறு அது பின்னரும் தவத்தின்கண் முயன்று முயன்று சிவத்துவம் முழுவதும் தன்பால் விளங்கும் வகை செய்து தன் அன்பை வெளிப் படுக்கும் அருட் கூற்றுக் களையுங் கடந்து சிவனே தானேயாய் நிற்கும். அருட் கூற்று நிகழ்த்தற் குரியது அவ் வுயிரே யாயினும், இந் நிலையில் அக் கூற்றின்கண் சிந்தை யின்றிய காரணத்தான் அதற்கு அவ்வகைக் கூற்று உண்டாகாமையுங் கைகூடும் என்று கூற உம்மை எதிர்மறைப் பொருட்டாத லறிக.

இனி, அம் மல வாசனைகளும் கழிந் தொழியின் அவ் வுயிர் வீடுபே றாகிய சிவபோகப் பெரு வாழ்வைப் பெற்று நிற்கும். ஆகவே, அது சிவச் சார்பான் தன் னியல்பைத் தலைப்பட்டுழி அதற்கு அருட் கூற்று உண்டாதலுங் கை கூடும், வீடுபே றடைதலுங் கைகூடும் என்று பொருள் கூறி உம்மையை எதிரது போற்றிய வெச்ச வும்மையாகக் கொள்ளினு மமையு மென்க.

இக் குறளுக்குப் பரிமேலழகர், 'கூற்றத்தைக் கடத்தலும் உண்டாவதாம் தவத்தான் வரும் ஆற்றலைத் தலைப்பட்டார்க்கு' என்னும் உரையையும், 'சிறப்பும்மை அது கூடாமை விளக்கிற்று. மன்னுயி ரெல்லாந் தொழுதலே யன்றி இதுவுங் கைகூடு மென எச்ச வும்மையாக வுரைப் பினு மமையும். ஆற்றல் சாப வருள்கள்' என்னும் உரை விளக்கத்தையுந் தந்தார்.

சாப வருள்கள் நாச் சித்தியானு முளவாதல் பற்றி அவற்றைத் தலைப்பட்டா ராவார்க்குக் கூற்றத்தைக் கடத்தலுங் கைகூடு மென்பது பொருந்து மாற்றுக்கு ஒவ்வாது என்பதனானும், இனி உம்மையை இறந்தது தழீஇய வெச்ச வும்மையாகக் கொண்டு மன்னுயி ரெல்லாம் தொழுதலே யன்றி இதுவுங் கைகூடு மென் றுரைத்தற்கண் அவ் வெச்ச வும்மையான் இரு பாக்களுக் குள்ள பொருளியை பன்றிப் புதிதாகப் போந்த பொருள் யாதுமில்லை என்பதனானும், அழகியா ருரை ஆசிரியர் கருத்தைத் தழுவிய தன் றென்க.

இப் பாட்டு என்னுதலிற்றோ வெனின், தவங் காரண மாகச் சிவசத்தைச் சார்ந்து நின்று தம் மியல்பைத் தலைப் பட்டார்க்குப், பிறர்க் கெல்லா மரிய தாகிய கூற்றங் குதித் தற் சித்தியும் மிக வெளிய தாகும், ஆகலான் தவஞ் செய்க எ-து.

(தொடரும்)

# 'நண் பென்னு நாடாச் சிறப்பு'

திரு. K. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை.

சிறப் பென்னும் உயர்வகைச் சொல், ஞான மெய்ப் பொரு ளாகிய அருள்நிலை அரும்பேறு என்னுங் கருத்தில், தமிழிற் பெரு வரவு தோன்ற வழங்குதல் தொன்று தொட்ட மா பாகும். ஆருயிரின் தோற்றம் வினை யளவே யாதலான், வினைத்தளை யற்று, வீட்டுக்கு நிமித்த காரண மாய விழுப் பொருளை உணரும் பொருட்டே, உயிர் அன்பினைக் கருதி உடம் பொடு தொடர் புற்றது. உடலோடு பொருந்தினு லன்றி, அன்பு செய்யக்கூடாமையின், உள் வாழ்வும் உலக வாழ்வும் இறை விளக்கமாக இயலுவிக்க அன்பின் பொருட்டே உயிருக்கும் உடம்புக்கும் தொடர்பு உண்டாயது. இத்தொடர்பின் பயனுல் அன்புடைமையும் ஆர்வ முடைமையும் விளைவது துணிபு. அன் பின் வழியது உயிர் நிலை யாதலான், உயிர் நிற்பதற்கு இடமாய உடம்பிற்கு உயிர்க் குண மாய அன்பு உள்வழி, அது இன்பமும் பிறவிச் சிறப்பும் எய்தும். எனவே, அன்பே ஆருயிரின் நிலைக் களன். உடலுக்கும் உயிர்க்கும் உள்ள அன்புத் தொடர்பே போன்று, உள் ளொன்றிய மாந்தரிடையே உண்டாம் நட்புத் தொடர்பும் அன்பினில் விளைந்தது. இவ் வுலகில் எய்தலாம் இன்பமும், இவ் வுலகை நீத்த பின்னை எய்தலாம் வீட்டின்பமும் அன்பின் பயனே. அன்பினுல் ஆர்வமும், அதனுல் நட் புடைமை யெனும் தேடரிய சிறப்பும் கிடைப்பதினுல், அன் பகத்து உயிர், பிறவியிற் சிறந்து வீடடைதல் திண்ணமேயா மென்க.

என்று மழியா நிலைபே றுடைய உயிர்க்குத், தான் பிறன் எனும் உணர்ச்சி யற்ற நட்பாடல் இன்றியமையாதது. அழிவு பெருத உயர்ந்த நட்பு நிலையில் உணர்ச்சியால் ஒன்றுபட்டார், நட்பு வயப்பட்டுத் தமக்குள்ள உரிமையாற் புரிவனவே நட்பென் னும் நல்லறத்திற்கு உறுப்பாகும். கலந்து உறவு கொள்ளும் அன்பு, நயத்தினைச் செய்து, இடுக்கண் களைவதாய நட் பென்னும் அறத்தினை விளைவிப்பதினுன், நயன் எனும் பண்பின் பயன், இம்மை யின்பமும், நட்பறத்தின் பயன், பேரின்பமு மெனக்

கொள்க. எனவே, நட்பினைப் போன்று செய்து கோடற்கு அரிதான பொருள் இவ் வுலகின்கண் வேறில்லை யாதலின், தேடரிய நட்பின் தன்மையினை முதற்கண் தேறவேண்டும்.

நண்பெனும் பண்பு இனிமையும் உண்மையும் குறிக்கு மாதலான், அது ஆய்ந்து அளவிட இயலாத சிறப் புடைத்து. நெடுநாள் நெருங்கிப் பழகி யாருடனும் மனம் ஒன்றுபட்டுக் கலந்து, மன மகிழ உறவு கொண்டு ஒத்து நடக்கும் தன்மை நட்பெனப்படும். அன்பின் வழிய தின்சொல் லாதலான், இயலும் வகையில் இன்மொழி கூறி மருவுதலும், தீநெறியில் சென்று இடுக்கணுற்றுழி விழுமம் துடைத்து, நல்லறிவு புகட்டும் முகத்தான் அன்னவரை உயர் நிலையினைப் பெறச் செய்வதும் நட்பாகும். மற்றும், கண்ணுறு நுண்ணிய துகளை விலக்கும் கைபோலுதவி, நட்டாருறு துயரத்தினைக் களைவது நட்பின் அரிய செயலாம். நட்பால் அன்பும அறனும் நிலையாக ஊன்றித் திண்மை யுறும் உள்ளம், தலை நாளில் மலர்ந்து முடிவு வரையில் கூம்பாது வேண்டிய வேணடியாங் கெய்தி யிருப்பதே நட்பாட்சியின் பயனாகும். இம்மையிலும் மறுமையிலும் உறுதி யளிக்கக் கூடிய அறம் பொருள்களில் தளர்ச்சி வந்துற்ற விடத்து, அத் தளர்ச்சியினை மனத்தின்கண் எவ்வித வேறுபாடு மின்றிச் செல்லுமாற்றால் தாங்கியும், அதனை ஒல்லும் வகையால் நீக்கியும், பின்னர்த் தன்னால் தளர்ச்சி நீங்கிய நண்பர்பால் திரிபின்றி எக்காலும் இயலு மெல்லையிற்றான் நட்பென்னும் அரசி தன் வீற்றிருக்கையை வைததிருப்பாள். இத் தகைய அன்புச் சேர்க்கையால் எழுந்த கெழுதகைமையோடு வந்த நட்பின் முன்னர், அறிமுகமும், இரண்டகமும், முகமனும் தலைக்காட்டா. இவர் நமக்கு இத் தன்மையர், இவ் வளவினர்; இவர் எம்மைச் சார்ந்தவர்; யாமும் இவர்க்கு இத் தன்மையோ மென்று பேணிப் புனைந் துரைப்பதும் நட்பிற்குச் சிறுமை யாகும். எனவே, நட்பினைத் தன்னைத் தான் நினைக்குமாறு நினைக்கத் தகுந்த தென்பது உணர்க. நட்புவயப்பட்டார்க்குக் கேடு நேர்ந்தவழி, தனக்கு வந்துற்ற துன்ப மென்று தானும் கருதி, உடன் வருந்தி, உடுக்கை யிழந்தவன் கைபோல நண்பனுக்கு வந்துற்ற இடுக்கணை நீக்குவதே நட்பிற் குரிய இலக்கண மாகும். நட்டார் கேடுற்ற காலையும் நட்பில் கோடா ரென்பது அவர் தம்மோ

டொட்டிய பண்பாகும். கேட்டிற்கு உதவாதார் நட்பை ஒழித்து விடல் நல மென்பது பெறப்படினும், உண்மை நட்பினரை அறியக் கேடும் ஒரு நன்மை யாகிறது. கேடு, நட்டாரது தன் மையை நீட்டி யளக்கும் அளவு கோ லாதலான், கேட்டினும் ஒரு பய னுண்டாகும் என்பது உணரற்பாற்று.

நண் பெனும் பண்பு, புணர்ச்சி, பழகுதல், உணர்ச்சி யொத்தல் என மூவகைத்து. இவற்றுள் முதற்கண் கூறப்பட்ட இருவகையும் இயற்கை நட்பெனவும், இறுதிக்கண் ணுள்ளது செயற்கை நட்பெனவும், நட்பின் தன்மை ஆய்ந்த அறிஞர், நட்பை இருவகைத்தாக அடக்கிக் கூறுவர். தம்மை யறியாதும் ஆய்ந்து பழகுத லின்றிச் சுற்றந் தழுவ லென்ற முறையில் இயல்பாக நிகழும் அன்பு இயற்கை நட்பாகும். பல்லாற்றானும் நட்புக் கோடல் வேண்டு மென்ற நியதி கருதியும், இயை போர்ந்தும், ஆய்ந்து தெளிந்த பின் நிகழும் அன்பு செயற்கை நட்பாகும். இச் செயற்கை நட்பு, தக்கார் நட்பு, தகுதி யில்லா தார் நட் பென இருவகைப்படும். தக்கோர் நட்பு பிறை நிறையும் நீர்மை போலது; நாளும் வளரும். தகுதி யில்லா தோர் நட்போ நிறைமதி பின் குறையுந் தன்மை போன்றது; நிலைபேறில்லாததாய்ச் சில நாட்களே நின்று அஃகியதுபோ லாகும். கருத்துணர்ந்து கற்றறி வுடையோரது அரிய உரிய நூல்கள் நுண்ணியவாய்க் கற்கக் கற்க நவ நவ மாய நயமும் பயனும் அளிப்பது போன்று, பணபுடைய நண்பர் உறவுப, பழகப் பழக இனித்துச் செல்லும். மற்றும் அறிவுப் பெருக்கு முண்டாம். எனவே, பன்னுள் பலரோடு மருவிப் பழகிப், பொருளாக மாசற்ற தக்காரையே நட்புக் கொளல் வேண்டு மென்பதும், ஆய்ந்து தெளிந்து கொள்ளாத கேண்மை பெருகுவது போலத் தோன்றி, நாளடைவில் பயனில தாய் நின்று, முடிவில் உயிருக்கு ஆகுலமுமாய் முடியும். புணர்ச்சி, பழகுதல் என்ற இரு வகை நட்பும் நுட்ப உணர் வுடையாரோ டன்றிப் பிறரிடத்தும் இயல்பாய்ப் பழக்க மிகுதி யான் பொதுவாக நிகழக் காண்பது. உணர்ச்சியொத்த லாவது, தாம் அவர் எனும் வேற்றுமை யுணர்ச்சி யற்று ஒன்றுபட்டா ரிடையே நிகழ்வது. அகமும் புறமும ஒத்த இயலபினராக வயங்கிய கோப்பெருஞ் சோழனுக்கும் பிசிராந்தையார்க்கும்

அமைந்தது போன்ற உணர்ச்சி யொத்தலே உடனுயிர் நீங்கும் உரிமைத்தாய நட்பினைப் பயக்கும். உணர்ச்சி யொத்த லாகிய நட்பினைக் கைக்கொண் டிருந்தமையின், சேரன் கணைக்கால் இரும்பொறையுடன் உயிரும் உள்ளமு மொன்றித், துனியின் றியைந்த துவரா நட்பின் இனியராம் பொய்கையார் எனும் புலவர் பெருந்தகை அச் சேர மன்னன் மானங் கருதித் துஞ் சுற்றதைக் கண்ட ஞான்றே தன் னுயிரையும் உடன் நீத்தார். மற்றும், பாரியுடன் நட்புரிமை கொண்டொழுகும் உரவோ ராகிய கபிலர் இளங்கோவேளை நோக்கி,

* * * இவரே
நெடுமாப் பாரி மகளிர், யானே
தந்தை தோழன்; இவரென் மகளிர்

எனத் துணிந்து கூறச் செய்தது, தாம் அவர் எனும் வேற்றுமை யுணர்ச்சி யற்ற நட்பின் முதிர்ந்த நிலை யாகும். மூவகைப்பட்ட நட்பினுள்ளும், உணர் வுடைமை தானே, நட்பாகும் உரிமை யினைத் தருதலான், உணர்ச்சி யொத்த சீரிய நட்பே சிறப் புடைத்து.

வாழ்க்கையை நயனும் பயனு முடைய தாக்கி விளக்கஞ் செய்வது, அன்பு மிகப் பொருந்திய பிணிப்பான நட்புடையா ரது தொடர் பாகும். நெஞ்சகத்தே நட்புப் பொருந்தியவரோடு யாத்த தொடர்பு, கரந்து கிடக்கும் அறிவு, உணர்வு முதலிய உள்ளியல்புகளையும், இழைந்து கிடக்கும் நயன், நண்பு, நாணம், பயன், பண்பு, பாடறிந்தொழுகல் என்ற அரிய அறு வகைப் பண்புகளையும் கிளரச் செய்து, அவைகளை இறைவன் அருள் நிலைகளிற் றேற வைத்து, இறுதியில் இறையருட் பெருக்கிற் றேக்குறச் செய்யும். பிறவியை நலமுடைய தாக்க வல்ல நட்பு அக நேய உணர்வை ஆருயிர்த் தொகைகள்பால் எழுப்பி, அன்பு, அருள் முதலிய உயி ரியற்கைகளை ஒளிரவைத்து, மக்கள் வாழ்க்கையை நாகரிகப் பொலி வுடையதாய்ச் செய்யும் வீறுடை யது. பல்காற் கண்டும், அளவளாவியும், மருவியும் தம்முட் கலந்து வாழ்வதிலேயே நாட்ட முடைய மக்களை ஒருங் கிருக்க வைத்து, அவர்கள் தனித்தனியே தன்னைப் பிறனாகவும், பிறனைத் தானாகவும் காணவைப்பது நய முணர்வார் நண்பின் ஒழுகலாறும்.

ஒருவரோ டொருவர் உயிரும் உடலுமா யிருந்து பழகி மகிழும் பான்மையை அளிக்க வல்ல நண் பென்னும் பண்பு இருமை வாழ்வுக்கும் சாலவும் இன்றியமையாதது. முயற்சிகளிடையே தளர்ச்சியால் ஒருவன் மனத்தகத் துற்ற துன்பம், ஆய்ந்து சூழ்தற் குரிய தன் இன்ப துன்பங்களைத் தனதாகக் கொள்ளும் உணர்ச்சி யொத்த நண்பனைக் கண்ட அளவானே கெடும். நட்டார்க்குத் துன்பம் வந்த ஞான்று அவர் துன்பத்தைப் போக்கி, நல்வழியின் கண் நடத்தித் தாங்கித், தன்னால் செயலற்ற விடத்து அவரோடு தானும் உடனிருந்து துன்பம் உழப்பது நட்பாதலான், அது துன்பத்தின் சுமையைப் போக்கும் பேராற்ற லுடைத்து. மற்றும், அது ஏதிலார் செய்யும் வினையினைத் தடுத்து, அவ் வினையால் விளையும் துன்பங்களினின்றும் காக்கும் ஏமாப் புடைத்து. இன்பம் வந்துற்றதை உயிர் போன்ற நட்பாளரிடம் உரைத்துக் கொள்வதால், அது பன் மடங்காய் மல்கிப் பயனளிப்பதைச் சற்று சிந்திக்கின், நட்பின் திறனுற்றோர் வீறிரதவாதி யெனக் கொள்வதில் வியப்பொன்று மிலலை. எனவே, மனம் அல்ல லுற்றழுங்கா வண்ணம் அறத்துறையின்கண் இருவினை ஒப்புத் தன்மைவழி நிலைநிறுத்தும் நங்கூரமும், மாற்றற் கரிய மனக் கவலையினையும் மாற்றித் தாங்கி நிற்கும் சுமை தாங்கியும், இனிமைப்பாடு அமைந்து என் பொடியைந்த அமிழ்தமும் நட் பென்பது அறியப்படும். அறிவுநீஇத் தீது செறுத்தி, தெய்வப் பண்புகள் கொண்டு விளங்கும் இத்தகைய நட்பினால் விளையும் நன்மைகள் பல வுளவாகலின், உணர்ச்சி யொத்து நட்டலே சால்புடைத் தென்பது நன்கினிது விளங்காநிற்கும்.

இறப்பில் உயிர் துறத்தலும், நோவின் நோதலும், பிரிவில் தனித் திருத்த லாற்றாது வருந்தி இரங்கலும், நட்புடைய பண்பாளர்க் குற்ற நீர்மை யாகு மாதலான், சிறந்தது பழகும் தெளிவுடைய நட்புக் குரியாரைத் தேர்ந்து கொளல், அறிவான்ற முயற்சியான் வருந்திப் பயின்று பயின்று பயன் தெளியக் காண்டலால் நேர்வது. அடுத்து நெடுநாட் பழகுவார் அனைவரும் நண்பராகார். உண்மை நண்பர் நாடாமலே அமைவார். தேடிக் கொள்ளும் நட்பு அவரவர் அறிவு உழைப்பின் பயனாக முடிவில் இயற்கைக்குப் பொருந்தியே இருக்கும். நட் பென்னும் நல்லறத்தில், நன்றி யுணர்வுடன் கூடிய நுண்ணிய பகுத்துணர்வும்,

திண்ணிய அறத் தெளிவுடைய செயலும் கொழுந்தோடிப் பொலிவதால், ஒருவரோடு, உட னுறைந்து பழகு முனபே, நட்பிற்கு ஆவாரை ஆய்ந்து கொளல் ஒரு தலையாக வேண்டப்படும். என்னெனின்,

நாடாது நட்டலிற் கேடில்லை, நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு

எனத் திறவிதாய் அமைந்த குறட்பா விளக்கி யிருக்கின்றது,

பெரியோர்

* * * *

நாடி நட்பி னல்லது
நட்டு நாடார்தம் மொட்டியார் திறத்தே

என்பது குறிஞ்சிக் கபிலரது வாய்ச்சொல். இவ்வணம் செய்வதிலும் அளப்பரிய பெருமாட்சி யுடைய நட்பினை விரும்பி யாள்பவர், நற்குடிப் பிறந்த தக்காருடைய நட்பினை, வேண்டிய தொன்றினைக் கொடுத்தாயினும் பெறல் வேண்டு மென்பது, உணர் வெழில் எழச் செய்யும்,

குடிப்பிறந்து தன்கட் பழிநாணு வானைக்
கொடுத்துங் கொளல்வேண்டு நட்பு

என்ற குறட் பாவினுன் விளக்கமாம். இத்தகைய நட்பு, பண்பருது பழகும் உள்ளன் புணர்ச்சியாரிடம் வாய்க்குமேல், நட்பினை உறுதிப் படுத்தும் உணர்ச்சி மூலம் இருவரது ஒத்த உள்ளக் கிடக்கை கலக்க, நட்பாடல் கொண்டோர், யாண்டு பலவாக நரை யிலராய் அறியாதன வெல்லாம் அறியப்பெற்று, ஒன்னார்த் தெறலும், உவந்தாரை யாக்கலும், வேண்டிய வேண்டி யாங் செய்தலும் வாய்ந்து, விழுப்பம் வீறிய திரு மருவு அருளுரு வினராய் வயங்கித் திகழ்வா ரென்பதில் ஐய மின்று. எனவே, விழு மிதிற் கொண்ட நட்பின் கண்ணே நொவ்வி திற் தவறும் வாராதபடி. நன்கறிந்து நாடலே மக்களறிவிற்கு உயர்வு நல்குவ தாகும்.

க. குணனுங் குடிமையுங் குற்றமுங் குன்ரு
வினனும் மறிந்தியாக்க நட்பு

௨. ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாந் துயரும் தரும்

௩. ஊதிய மென்ப தொருவற்குப் பேதையார்
கேண்மை யொரீஇ விடல்

௪. மருவுக மாசற்றார் கேண்மை யொன்றீத்தும்
ஒருவுக ஒப்பில்லார் நட்பு

௫. பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலிற் குன்ற லினிது

௬. செய்தேமஞ் சாராச் சிறியவர் புன்கேண்மை
எய்தலின் எய்தாமை நன்று

என்ற இன்னோரன்ன திப்பிய மொழிகளான் நட்பியல் புடையாரை ஆய்ந்து அளந் தறிதற் கேற்ற உளவுகளை வள்ளுவர் எத் துணைச் செவ்விதாய்த் தேறி, நுவன்றிடற் கரிய நட்பின் மாட்சிமை தோன்ற, திட்பமாக உணர்ந்து தெருட்ட லானா ரென்பது சற்று உணரற் பாலது.

செம்மண் நிலத்தி னியல்பால் நீர் திரிதல் போன்று, நல் லியல்பும் தெளிவு மிலாரோடு நட்டவர் அதன் பயனை அடை யாம லிரார். துன்புறுதற் குரிய நிலைகளைப் பொருந்தாத நட்பு வருவிக்கு மாதலான், தகுதி யற்றவர் நட்பி னியல்பு நோயினுங் கொடியதாய் நின்று உய்வதற்கும் அருமையாகும். பண்பிலார் கேண்மையும், பேதையார் நட்பும், தம நலமே அவாவும் தன்மை யுடைய அறக்கொடியோர் நட்பும், அறிவிலாப் புல்லர் நட்பும், வினைவேறு சொல்வேறு பட்டார் தொடர்பும், மனைக் கண் நட் பாடி மன்றிலே பழிப்பார் தொடர்பும், விலைமகளிர் மனம் போன்று வேறுபட்டார் நட்பும் நனவிலும் கனவிலும் இன்னா மையாகு மாதலான், இத் தீய சார்புடையார் நட்பின பயனைக் கருதாது, அன்பிற் பிறழ்ந்தும் நெகிழ்ந்தும் போவ தியல்பாத லான், அவரது நாம வெங் கேண்மை கொள்ளா திருத்தலும், சிறு நனியரிய போல் காண்பதும் ஒருவருக் குற்ற ஊதிய மாகு மென்க. கேண்மை கௌவைக்கும் இடமாக நின்று விழுமமாக மாறுதலின், நட்பின் இயலாற்றலை உனனுந்தோறும் இதன் திறத்தில் எத்துணை ஊக்கமும் உறுதியும் உழைப்பும் விழிப்பு முடையராய் மக்கள் ஒழுக வேண்டு மென்பது புல னாயிற்று:

நய முணர்வார் நண்பு, மாருத அன்போடு உள்ளத்திற் பற்றி நின்று, உயிரில் ஒன்றிக் கலக்கும் தன்மைத் தாதலின், அன்பின் வழி வந்த கேண்மையர் தம்மொடு ஒருங்கியைந்து உரிமையுடன் பழகிய நட்பினரிடத்து அறியாமையானே அல்லது ஊழினானே குறையும் பிழைபாடும் காணின், பழைமை கருதி, குறையினை நீக்கிப் பிழையினைப் பொறுத்தல் சாலவும் சால்புடைத்து. அறியாமையினான் இன்னா செய்தாலும், நட்பு விடுதற் கரியாரை அன்பும் அறனுங்கொண்டு இடித்துரையோ அல்லது இயலுரையோ கூறி, நல்லறிவு புகட்டும் முகத்தானும் அன்னாரை ஆற்றுப் படுத்தியும், நன்னெறியில் புகுத்தியும் பாராட்டி யொழுகுவர், சீரிய கேண்மையர்.

> நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
>
> மேற்சென் றிடித்தற் பொருட்டு

என்பது பொய்யில் புலவர் பொருளுரை. தீமை கண்டோர் திறத்தும் தாமறிந் துணர்க என நுவன்று பொறுப்பதூஉம் நட்புத் திறன் கண்டா ரியலபு. உட னுறைந்து மன மொத்துக் கலந்த நண்பர் நட்ட பின்றை நண்பருடைய குற்றங்களைப் பிறர் பால் எடுத்துக் கூறுதல் பழியாவது மின்றிப் பழைய உரிமை நேய உறவும் கைத்துப் போகு மாதலான், ஒருவரது பொறை இருவர் நட்புக்கு இட மென்ப துணர்ந்து பொறுமை பூண்பது திண்மை அறிவாகும், இதனான் நட் புரிமைக்கு மூலமா யுள்ள அன்பின் கனிவு பொறுமை யென்பதும், அன்பின் வெற்றிக் கதிரொளி பொறுமையா னெய்தும என்பதும் துணியப் படும். ஈருடலில், உயிரும் உள்ளமும் அன்பும் ஒன்றேயாய் நிற்கும் நண்பர், இழைத்த குற்றம் அன்பின வழிநோக்க எவ் வாற்ருனும் மனம் வருந்தத் தக்க தல்ல வென்பது அறியற் பாற்று. முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பி, னஞ்சு முண்பர் நனிநா கரிகர் என்பது ஈண்டு கருத்திற் பதிக்கற்பால தாம். எனவே, நட்பு, பொறை எனும் தவிசமைத்து, அன்பும் அறிவும் நிறைந்து நிலைபெற்றுத் திண்மை யுறும் உள்ள மாகிய நல் லிடத்தே இனிது வீற்றிருப்பது நினைவு கூர்ந்து அதன் மாட்சி தெளிதல் வேண்டும்.

நட்புப்போல செய்து கோடற்கரியவான பொருள் இவ்வுலகிலில்லை யாதலான், அது நீடு நிகழ்வதற்கு அரியவாகக் காக்கும் அடிப்படைப் பொருள்கள் யாவையென முதற்கண் தேறவேண்டும். பாலோ டளாய நீர் பாலாகித் தோன்று மாங்கு, ஒருவரோ டொருவர் பழகு நெறியால் வயப்பட்டுச் சார்தல் மூலம் இருவருக்கு முள்ள உணர்வு செயல் ஆகிய இவற்றின் ஒற்றுமையே நட்பாதலான், நன்னெறி யறிந்தொழுகும் தக்கார து சார்பைச் சார்தல் நட்பின் சார மாகும். நட்பியல்புடையாரிடத் துள்ள நன்மை தீமைகளை யறிந்து நற் சார்வுசார, அவரது நண்பர் உரையாணி யாவ ரென்பது ஈண்டு மறக்கற் பாலதன்று. எனவே, சீரிய நட்பு இன மன நலத்தைப் புலனாகச் செய்து சான்றாண்மையினைத் தரும். சான்றாண்மைக்கு உறுப்பாக அறிவு, நிறை, ஓர்ப்புக் கடைப்பிடி என்ற இன்னோரன்ன நற்குணங்கள் பல உண்டாயினும், பிறர் பிழை செய்த வழி அவரை ஒறுக்கக் கருதாது பிழை பொறுத்திருத்தலாம் நலத்தையுடைபது சால்பு. பிழை பொறுத்த வழி, செய்த பிழை உள்ளத் திருத்தல் இயல்பாதலின், அதனையும் மறத்தல் தலையெனக் கொள்வது அகங் கலந்த நட்பின் உரிமை யாகும். மற்றும் அறநெறியில் பிறர்க் குதவி யாற்றும் பண்பாற்றலை நட்பு உண்டாக்குவதால், துன்பம் தருவ தாகிய பிறப்பினை அஞ்சவிடாமல் செய்வதும் அந் நட்பே யாகும். ஏனெனில், நட் பென்னும் பண்பு மறுமைக்கு வித்தாம் அறச் செயலை வாழ்வில் மயலின்று முறையாக ஆற்றச்செய்து எஞ்ஞான்றும் துன்புறாது வாழும் நிறை வாழ்க்கையின் வழியினை வகுத்து, எழுவகைப்பட்டவாகித் தோற்றும் பிறப்பி னெல்லாம், தன்வயப்பட்டாரைத் துன்பத்தினின்றும் நீக்கிவிடும்.

நட்டார் இடையில் வேறுபடார் என்ற மன மறியப்பட்ட உண்மை ஒருமைப்பாடு நட்பு நிகழ்வதற்கு இன்றியமையாத பொரு ளாகும். பிறரது இன்ப துன்பங்களைத் தனதாக்கிக் கொண்டு, உள்ளொன்றி உணர்ச்சியொத்தாராக மக்களை யாக்கி நட்பை உறுதிப்படுத்துவது, உண்மை நிலை யன்றிப் பிறிதன்று. உண்மையின் ஆற்றல் வழி நட்புரிமை உணர்வு பிறக்க, அது இறப்பினையும் நீக்கும். தேரின், களவறு நடையுடன் உயிரோடு துணைவருவது, உண்மை யன்றிப் பிறிதில்லை, எனவே, நட்பின்

முன் உரைமணி உண்மையென்க. மற்றும், வாழ்வைக் கெடுக்கும் மன அழுக்குகளுக்கும் முக்குற்றங்களுக்கும் மருந்தாய் விளங்குவது நட்புரிமையில் தவழும் உண்மையே. இதன் இயற்கைத் தன்மையும் இயல்பும் வறுமை வந்துற்றவிடத்தும், செல்வம் சென்றவிடத்தும் புலனாகும்.

அகமாய மனத்தொடுபட்ட உண்மை, மனத்தினிகழும் நேய உரிமையில் தொடர்புபடப், பிற உயிர்கள் மாட்டு அருள் பிறத்தற்குக் காரணமாய உள்ள நெகிழ்ச்சி வெளிப்படுகின்றது. பிழம்பு உணர்த்திக் காட்ட ஏலாதெனினும், இது நட்பிற்கே ஒரு பெருஞ் சிறப்புரிமையாகக் கொண்ட பொருள். உள்ள நெகிழ்ச்சியுடையார்க்குப் பிற உயிர்கட்டுன்பங்கள் கண்டவழிக் கண்களில் நீர் ததும்புவது இயற்கையாதலின், அக் கண்ணீரரும்பலானே அன்புடைமை விளங்கும். ஒருவருக்கு அன்பொடு நட்புணர்வும் தொடர்புபட்டு முதிர்ந்த ஞான்று, அன்னவரும், பிறர்க்குரியராய் நின்று தன்னையும் மறக்கும் தன்மை நிலை பெறுவரென்பது உளவியல் கொண்டு துணியப்படும். அன்புடையவர், தமது என்பானும் பிறர்க்குப் பயன்படுவாராதலின் அன்புடைமை, உயிர்க்கு உடம்பொடு உண்டாய தொடர்பின் பயனாகும். மனமொத்த அன்பினால், உலகளாவிய ஆர்வமுடைமையும் உயிரளாவிய நட்புரிமையும் உண்டாகும். இத்தகைய நட்புரிமை எனும் நல்லறம், தேடரிய செல்வப் பொருளாய்த் திகழ்ந்து, நட்டாரைத் தாம் அவர் எனும் வேறுபாடிலாது, இறுதியில் வீட்டின்பம் பயக்கும் மெய்யுணர்வில் தலைப்படுத்தும். நட்பின்வழி இன்பம் நுகர்தல் விண்ணுலகத்து இன்பம் போன்று விரும்பப்படும் மேன்மைத்தாதலின், இந்நிலையில் நட்பியல்புடையார், தாம் தம் நண்பருக்கு உயிரோவியம் போல் அவராய், ஈர்ப்புண்டு இருக்க, நட்டாரது தெய்வத் தன்மை பொருந்திய ஒற்றுமை உள்ளத்தில் உயிராய்க் கலந்திருக்கும் அன்புணர்வு நிலையாகிய இன்பம் மேன்மேலும் மாட்சிமைப்படும். மாட்சிமைப்பட்ட இத்தகைய இன்பநிலைக்கண் விழுப்பமுணரும் பெற்றியார் தாமே தமக்குத் தகைபெறு நட்பாளர் என்ற மெய்ம்மைதேறித் தமது அந்தக் கரணங்களைத் தூய்மையதாக்கி நண்பராகக் கொண்டு, சிறப்பெனனும் வீட்டை நண்ணுவர். கரணங்களெல்லாம் கடந்து நின்ற இறை

வனை, 'நாவே முதலாகக் கூறும் கரணம் எல்லாம் நீயே' என வாதவூரடிகள் உயிரையும் உடலையும் இறைவன் வயத்தே வழி பாட்டின் மூலம் பொருத்தி 'இறைவனுக்குத் தன்னை நண் புடைய அன்பராக்கித் தம உள்ளம் அவர் பாலே பிணிப்புண்ட மையின், அது மீண்டும் அவர் பாலே கருதியவழி நட்பினை மீதூரச் செய்து, மூதறிவால் இறைவனோடு இரண்டறக் கலந்தது உணரற்பாலது. சீரிய நட்பால் பிணிபட்ட கரணங்களுடனேயே, அனபுடைய உயிர் உள்வழி, அறிவு நல னும், விழுததகையும, தெய்வ மாட்சியும இனிது தெளியப்படும. மற்றும், கடவுட் டன்மை மேவிய அந்தக் கரணங்களுடனேயே உயிர் பிரிவதால், அதில் ஒருங்கே வளரும் அறமும் அன்பும் நய னும் உயிர்க் குற்ற துணையாகி வியக்கத்தக்க வகையிற் சுடர் பரப்பி மினிரா நிற்கும் அருணிலை யுண்மையினைப் புலப் படுத்தும்.

சீரிய நட்பெனும் பண்பு, ஒரு தன்மையாய அணுக்கள் இயல்பாய்ச் சேர்ந்து ஒன்றுபடுகின்றது போன்று, மக்கள்பால் ஒருமைப்பாடு தோன்றச் செய்து, மக்களுயிர்களின உணர்வுகளி லும செயல்களிலும் இயல் ஆற்றல் மிக குடையதாய்ச், சிதைக்க இயலாத வண்ணம ஆழநதும அகன்றும நுண்ணியதாயும இறை வனது பொதுத் தன்மை நிலை போன்றிருப்பதினுன், இறைக் குரிய இயல்புகளை அறிந்து பயனுறும அனுபவ முறையிற கண்ட வாதவூரன்பர் தந் நெஞ்சகததில ஒன்றுது மென்ற தொன்று படு நட்பு பொருந்திய இறைவரை, 'வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந் தகன்ற நுண்ணியனே' என இடை விடாது உள்ளுவாரா யினர். பின்னர், 'இன்பே அருளி எனை யுருக்கி உயிருண்கின்ற எம்மானே, நண்பே அருளாய் என்னுயிர் நாதா நின் னருள் நாணுமே' எனத் தமக்கும இறைவருக்கும உள்ள நட்பின் மிகுதி யால அலறியும அரற்றியும, தமது பேரறிவு விளக்கத்திற் கேறப விளைந்த அன்பு நிகழ்ச்சியால் தொழுது அழுதழுதும இறைவற் கும தமக்கு முள்ள பழகிய நட்பினை மெய்யகத்தே இன்பம மிகப் பெருக்கிக் கொண்டே, ஊனுரும் உயிர் வாழ்க்கையின் கண், நலந் திகழும் நன் னெறி காட்டி உய்யும் வகையின் உயிர்ப் பிணையும் அறிய வைத்தார், மணிவாசகர். இதனுன் இறை நாட்டத்தி னூடு வந்த நட்பே சாலச் சிறப்புடைத் தெனக் கடைப் பிடிக்க.

எனவே, நட்புரிமையின்கண் உறைந்த மக்கள் பல் வகை யானும் சிறந்த நுகர் வுடையராய் மாட்சிமை யுற்று, நிலை யில்லா வுலகத்துப் புன்மையினை நீக்கி, நிலை யுடையதினை யறிந்து, மெய் யுணர்வு கைவரப் பெற்று, அதனுன் அருள் நிலை விழுப்பமும் சிறப்பும் வாய்ந்து, தெய்வ வாழ்வில் வீறித் திகழ்ந்து விளங்குவ ரென்பது பெறப்படவே, மக்களைச் சிறப் பீனும் இன்ப வூறலில் இறுத்த வல்லது நட்பின் மாணல மாகு மென்ப தூஉம், அது மக்க ளுயிர்க்கு இன்றியமையாத தொன்ருய்க் கருதப்பட்டு, அதன் மாட்சி தெளிதலும் வேண்டு மென்பதூஉம் இவ் வாற்ருல் இனிது விளங்கா நிற்கு மென்க.

---

'வானுகி மண்ணுகி வளியாகி ஒளியாகி
ஊனுகி யுயிராகி யுண்மையுமா யின்மையுமாய்க்
கோனுகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானுகி நின்ருயை என்சொல்லி வாழ்த்துவனே.'

---

'வைய மீன்றதொன் மக்க ளுளத்தினைக்
கையி னுலுரை கால மிரிந்திடப்
பைய நாவை யசைத்த பழந்தமிழ்
ஐயை தாடலை கொண்டு பணிகுவாம்.'